2.3.2015

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## காடுகள், மலைகள், நீர் நிலைகளை பாதுகாப்பது அவசியம்: தருண் கோகோய்

காடுகள், மலைகள், நீர்நிலைகளைப் பாதுகாப்பது அவசியம் என்று அஸ்ஸாம் மாநில முதல்வர் தருண் கோகோய் கூறினார். குவாஹாட்டி நகரில், 36ஆவது இந்திய புவியியல் வல்லுநர்கள் மாநாடு ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில், முதல்வர் தருண் கோகோய் பேசியதாவது: பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினமும், இயற்கையோடு ஒன்றுபட்டு வாழ வேண்டும். இயற்கையுடன் ஏற்படும் முரண்பாடுகள் பேரிடர்களுக்கு வழிவகுக்கும். இயற்கை ஆதாரங்களின் அழிவால், புவி வெப்பமாதல் பிரச்னை தலைதூக்கி உள்ளது. அவற்றை நுட்பத்துடன் பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. காடுகள், மலைகள், நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டும். இதற்கு மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது. இயற்கை ஆதாரங்கள் மிகுதியாக இருக்கும்போது, மக்களிடத்தில் மெத்தனப்போக்கு ஏற்படுகிறது. அவை அளவோடு இருப்பது, மக்களை கடினமாக உழைக்கத் தூண்டுகிறது. இஸ்ரேல், சிங்கப்பூர் ஆகிய நாடுகள், அளவோடு இருக்கும் இயற்கை ஆதாரத்தை முறையாகப் பயன்படுத்தி வளர்ச்சியைக் கண்டுள்ளன. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், சுற்றுச்சூழல் மாசுபாடு பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் என்றார் தருண் கோகோய்.

**<u>பால்வள மேம்பாட்டுத் திட்டத்தில் 50 மகளிருக்கு ரூ. 15 லட்சம் கடனுதவி</u>**

மேல்மருவத்தூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நபார்டு வங்கி மூலம் பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 மகளிருக்கு ரூ. 15 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. மேல்மருவத்தூரில் தனியார் தொண்டு நிறுவனம் நடத்திய நிகழ்ச்சியில் நபார்டு வங்கி மூலம் கடன் வழங்கும் விழா நடைபெற்றது. நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் ரவிசங்கர் வரவேற்றார். தலைமையக துணை மேலாண்மை இயக்குநர் ஆர். அமலோர்பவநாதன் தலைமை வகித்து கண்காட்சியைத் தொடக்கிவைத்தார். கண்காட்சி அரங்குகளில் இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட அரிசி, கூட்டுப் பொறுப்பு குழு உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட பட்டுத்தறிச் சேலைகள், அப்பளம், வடகம், ஊறுகாய், ஆகியவற்றை சந்தையில் முறைப்படுத்துதல் குறித்து விளக்கினார். மேலும் இயற்கை உரம் தயாரித்தல், ரசாயன உரம் இல்லாமல் நெல் உற்பத்தி செய்தல், காய்கறி சாகுபடி செய்வதன் பயன்பாடு குறித்து விளக்கினார். இதைத் தொடர்ந்து ஒரத்தியில் உள்ள 50 பெண்களுக்கு பால் ள மேம்பாட்டுத் திட்டத்தின்படி தலா ரூ. 30 ஆயிரம் வீதம் ரூ. 15 லட்சம் மதிப்பில் கடனுதவி வழங்கப்பட்டது. மேலும் 5 பயனாளிகளுக்கு சாண எரிவாயு கடன், 3 பயனாளிகளுக்கு மண் புழு உரம் தயாரித்தல் உள்ளிட்ட கைத் தொழில்களுக்கு கடன் வழங்கப்பட்டது. நபார்டு வங்கியின் நீர் செறிவு மேம்பாட்டுத் திட்டத்தின்படி பாதிரி, காட்டுக்கூடலூர் கிராமங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதாரக் கடன் வழங்கப்பட்டது. பாதிரி கிராமத்தில் உருவாக்கப் பட்ட 3 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ. 50 ஆயிரம் வீதம் கடன் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், நபார்டு வங்கியின் முதன்மைப் பொது மேலாளர் வெங்கடேஸ்வர ராவ், தொண்டு நிறுவனத் தலைவர் பிச்சாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தொடக்கம்

மதுரை மாவட்டம், தென்பழஞ்சியில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசித் திட்ட முகாம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. கால்நடைகளுக்கு கால் மற்று வாய் பகுதிகளில் ஏற்படும் கோமாரி நோயைத் தடுக்க இம்முகாம் நடத்தப்படுகிறது. கால்நடை பாதுகாப்புத் துறை சார்பில் நடைபெற்ற இந்த முகாமை, மாவட்ட ஆட்சியர் இல. சுப்பிரமணியன் துவக்கி வைத்தார். பின்னர் அவர் பேசுகையில், இத்திட்டத்தில், மதுரை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 2,15,800 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மார்ச் 21ஆம் தேதி முடிய அனைத்து கிராமங்களிலும் பசு, காளை, எருமை மாடுகள் மற்றும் 4 மாதங்களுக்கு மேற்பட்ட கன்றுகளுக்கு தடுப்பூசி போடப்படும் என்றார்.

## கால்நடை தடுப்பூசி முகாம்

தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஞாயிற்றுக்கிழமை முதல் மார்ச் 7-ஆம் தேதி வரை கால்நடை காணை நோய் தடுப்பூசி முகாம் நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மாவட்டத்துக்கு உள்பட்ட அனைத்து ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் நடைபெறும் கால்நடை வாய் காணை மற்றும் கால் காணை நோய் தடுப்பூசி முகாமுக்கு, விவசாயிகள் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து இலவசமாக தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். முகாம் நடைபெறும் இடம் குறித்த விவரம், கால்நடை பராமரிப்புத் துறை மூலம் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொட்டில்முறை ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம்

ராமநாதபுரத்தில் விவசாயிகளுக்கு கொட்டில்முறை ஆடு வளர்ப்பு பற்றிய பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு வேளாண்மை துணை இயக்குநர் ஆர்.அரிவாசகன் தலைமை வகித்தார். துணை இயக்குநர் (மத்திய திட்டம்) எஸ்.சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.

பயிற்சியின் போது கால்நடை மருத்துவர் ஆர்.கார்த்திகேயன் கொட்டில் முறை ஆடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பின் பயன்கள் குறித்துப் பேசியதாவது: கொட்டில்முறையில ஆடு வளர்க்கும் விவசாயிகள் கிழக்கு, மேற்காக கொட்டகை அமைத்தால் காலையிலிருந்து மாலை வரை சூரிய ஒளி நன்றாகக் கிடைக்கும். கான்கிரீட் தரையாக இருப்பது நல்லது, உலர் தீவனம், தண்ணீர் தொட்டி, பசுந்தீவனம் ஆகியவற்றுக்கு தனித்தனியாக இடம் அமைக்க வேண்டும். ஆடுகளை தாக்கும் அம்மை நோய் மற்றும் அடைப்பான் நோய்களுக்கு தவறாமல் தடுப்பூசி போட வேண்டும். ஒரு கொட்டிலில் 50 ஆடுகளை பராமரிக்க இரு நபர்கள் போதுமானது. கோழி வளர்ப்புக்கு கிரிராஜா, அசில், வனராஜா ஆகிய நாட்டுக்கோழி ரகங்கள் சிறந்தது. விவசாயிகள் தங்கள் வசதிக்கு ஏற்ப புறக்கடை கோழி வளர்ப்பு, கூண்டு கோழி வளர்ப்பு மற்றும் ஆழ்கூழ் முறையினை தேர்வு செய்து கொள்ளலாம். கோழிகளை நோய் எதுவும் தாக்காமல் இருக்க 5 மாதங்களுக்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும் என்றும் விளக்கம் அளித்தார். பயிற்சியில் அச்சுந்தன்வயல், அத்தியூத்தி, தென்பொதுவக் குடி, கீழகாஞ்சரங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். நிறைவாக வேளாண்உதவி இயக்குநர் ஆர்.ராமசாமிபாண்டியன் நன்றி கூறினார். பயிற்சிக்கு பின்னர் விவசாயிகள் பெரியபட்டினம் ஜஹாங்கீர் தோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கொட்டில் ஆடு வளர்ப்பு முறையை நேரில் பார்வையிட்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் எம்.சித்ரலேகா, வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர்கள் ப.கோசலாதேவி, ஜெ.சேகர், த.சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் செய்திருந்தனர்.

## <u>ஆண்டிபாளையம் குளம் சீரமைப்புப் பணிகள்</u>

திருப்பூர் ஆண்டிபாளையம் குளத்தில் பொழுதுபோக்கு பூங்கா, தடுப்பணை பராமரிப்பு, தார் சாலை, வடிகால் என மொத்தம் ரூ.1.12 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளை வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மூலமாக உள்ளூர் திட்டக் குழும நிதி ரூ. 36 லட்சம் மதிப்பீட்டில் ஆண்டிப்பாளையம் குளத்தில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்பட உள்ளது. இதற்கான பூமிபூஜை ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன், பூமிபூஜை செய்து, பணியைத் தொடங்கி வைத்தார். அதேபோல, ஆண்டிப்பாளையம் தடுப்பணையை ரூ.60 லட்சம் மதிப்பில் பராமரிக்கும் பணி, பல்லடம் நகராட்சி 6-ஆவது வார்டு பச்சாபாளையம், மாகாளியம்மன் கோயில் பகுதியில் ரூ. 6 லட்சம் மதிப்பில் தார் சாலை அமைத்தல், ரூ. 9.90 லட்சம் மதிப்பில் வடிகால் அமைக்கும் பணிகளையும் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியது: ஆண்டிப் பாளையம் குளம் அமைந்துள்ள பகுதியில் 56 சென்ட் நிலத்தில் வரவேற்பு வளைவு, புல் தரையுடன் கூடிய பூங்கா, சிறுவர்கள் விளையாடும் இடம், ஓய்வுக் கூடம், சுற்றுச்சுவர், முள்வேலி அமைப்புகளுடன் ரூ.36 லட்சம் மதிப்பில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்பட உள்ளது. திருப்பூர் சுற்றுவட்டாரப் பகுதி மக்களுக்கு பயன் உள்ளதாக அமையும். ஆண்டிப்பாளையம் தடுப்பணை பராமரிப்பு மூலமாக இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்றார். பல்லடம் எம்எல்ஏ கே.பி.பரமசிவம், பல்லடம் நகராட்சி ஆணையர் பி.நாராயணன், செயற்பொறியாளர் பன்னீர்செல்வம், துணைத் தலைவர் பழனிசாமி, பொதுப்பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு உதவி செயற்பொறியாளர் குமாரசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

மொடக்குறிச்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட 46 புதூர் பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்க வளாகத்தில் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் வே.பிரபாகர் தலைமை வகித்தார். கால்நடைத் துறை மண்டல இணை

இயக்குநர் முருகன் வரவேற்றார். மொடக்குறிச்சி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.என்.கிட்டுசாமி முகாமை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி யில், மொடக்குறிச்சி ஒன்றியக் குழுத் தலைவர் தமயந்தி சிவானந்தம், பள்ளியூத்து கூட்டுறவு சங்கத் தலைவர் குருமூர்த்தி, 46புதூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுசங்கத் தலைவர் தங்கவேல், ஆவின் துணைப் பொதுமேலாளார் தேவராஜன், கால்நடைத்துறை உதவி இயக்குநர்கள் தங்கவேல், கோவிந்தராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## 621 ஹெக்டேரில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ரூ.3.35 கோடி

திருச்சி மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை மூலமாக 621 ஹெக்டேரில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ரூ. 3.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் அத்துறையின் உதவி இயக்குநர் ரவிச்சந்திரன். தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் தொட்டியம், முசிறி ஒன்றியப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் பயணத்தின்போது, அவர் தெரிவித்தது: தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் மூலமாக பயிருக்குத் தேவையான நீரை குறைவான அளவில், நீண்ட நேரம் மண்ணின் தன்மைக்கேற்ப சொட்டுவான்கள் மூலம் நேரடியாகப் பயிரின் வேர்ப் பகுதிக்கு அளித்திடும் முறையில் சொட்டு நீர்ப்பாசன வசதி சிறு, குறு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இந்த இயக்கத்தின் மூலம் தோட்டக்கலைப் பயிர்களுக்கு 542 ஹெக்டேரும், தோட்டக்கலை அல்லாத பயிர்களுக்கு 79 ஹெக்டேரும் என மொத்தமாக 621 ஹெக்டேரில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டு படிப்படியாக விவசாயிகளுக்கு மானியம் முழுமையாக வழங்கப் பட்டு வருகிறது. மாவட்டத்தில் தா.பேட்டை, துறையூர், உப்பிலியபுரம் வட்டாரங்களில் அதிகளவில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப் பட்டுள்ளது என்றார் ரவிச்சந்திரன். இதுகுறித்து தொட்டியம் வட்டம்,

சின்னப்பள்ளிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி எஸ். முருகேசன் கூறியது: சொட்டு நீர்ப்பாசனம் மூலம் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்து வருகிறோம். இதனால், கூடுதலான விளைச்சல் இருக்கும். ஏக்கருக்கு 20 டன் கிழங்கு கிடைக்கும் என்றார் அவர். இதேபோல், பிடாரமங்கலத்தைச் சேர்ந்த கரும்பு சாகுபடி செய்து வரும் விவசாயி என்.சுப்பிரமணி கூறியது: சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க ஏக்கருக்கு அரசு ரூ. 43,618 மானியம் வழங்குகிறது. ஒருவெட்டு கரணை மூலம் விதைக் கரும்பு நடப்பட்டுள்ளதால் அதன் வளர்ச்சி சீராக இருக்கும். வழக்கமாக நடவு செய்யப்பட்ட முறையில் 35 முதல் 40 டன் சாகுபடி கிடைத்த நிலையில், இந்த முறையில் 60 முதல் 80 டன் வரை சாகுபடி கிடைக்கிறது என்றார்.

## செந்துறை அருகே விவசாயிகளுக்கு ரூ.9.75 லட்சம் கடன் உதவி

செந்துறை அருகே விவசாயிகளுக்கு ரூ.9 லட்சத்து 75 ஆயிரம் கடன் உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. செந்துறை அருகே உள்ள பரணம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் சார்பில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பரணம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் கார்த்திகேயன் தலைமையில் 39 பேருக்கு தலா ரூ. 25 ஆயிரம் வீதம் ரூ. 9 லட்சத்து 75 ஆயிரம் கடன் தொகையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு கடன் சங்கச் செயலாளர் ராமலிங்கம் வரவேற்றார்,சங்கத் தலைவர் எழிலரசி, ஒன்றிய இளைஞர் அணிச் செயலாளர் உதயம் ரமேஷ்,கிளைச் செயலாளர் நடராஜன், இயக்குநர்கள் கலியபெருமாள், இளங்கோவன், கலையரசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 3.92 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு

தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.92 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம். தஞ்சாவூர்

மாவட்டம், குருங்குளம் மேற்கு அற்புதாபுரம் பகுதியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், தேசிய கால் மற்றும் வாய் கோமாரி தடுப்பூசித் திட்ட சிறப்பு முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தலைமை வகித்தார். முகாமை தொடக்கிவைத்து தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் பேசியது: தமிழக மாவட்டங்களில் அனைத்து கிராமம் மற்றும் குக்கிராமங்களில் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி தடுப்பூசித் திட்டத்தின் கீழ் மார்ச் 1-ஆம் தேதி முதல் 21 நாட்களுக்கு 8-ஆவது சுற்று தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் உள்ள 83 லட்சம் பசு மற்றும் எருமைகளுக்கு தடுப்பூசி போடப்படும். இந்த முகாமில் 100 சதவீதம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அனைத்து கிராமங்களிலும் சிறப்பு கிராமசபை கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. பல்வேறு தொற்றுநோய்கள் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார மற்றும் உற்பத்தி இழப்பு ஏற்படுகிறது. பெரும்பாலான கால்நடை வளர்ப்பவர்கள் சிறு, குறு விவசாயிகளாக இருப்பதாலும், அவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்கு கால்நடைகளை நம்பி இருப்பதாலும், கால்நடைகளின் இறப்பு மற்றும் தொற்றுநோய் பாதிப்பு அவர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்துகிறது. தமிழகத்தில் கால்நடை நோய்கள் பரவலாக காணப்படுகிறது. இந்நோயால் கால்நடைகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களின் பசுக்கள், எருதுகள், எருமைகள் மற்றும் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட இளங்கன்று களுக்கு தடுப்பூசியை தவறாது போட்டுக் கொள்ள வேண்டும். இந்த முகாம் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.92 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 3 மாதங்களுக்கு மேற்பட்ட கால்நடைகளுக்கும் சினை மாடுகளுக்கும் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். இதனால் பால் குறையாது என்றார் அமைச்சர். முகாம்

தொடக்க விழாவில், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி, எம். ரெத்தினசாமி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் செல்வ விநாயகம், உதவி இயக்குநர்கள் நெடுஞ்செழியன், ரவிச்சந்திரன், ஊராட்சித் தலைவர் ராயப்பன், துணைத் தலைவர் முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>கோமாரி நோய்க்கான தடுப்பூசி முகாம் தொடக்கம்</u>**

பெரம்பலூர் அருகே குரும்பலூரில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால் மற்றும் வாய் நோய் எனும் கோமாரி நோய்க்கான தடுப்பூசி முகாம் தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இம்முகாமை தொடக்கி வைத்த பெரம்பலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் இரா. தமிழ்ச்செல்வன் பேசியது: கால்நடைகளை தாக்கும் கால் மற்றும் வாய் நோய் எனும் கோமாரி நோயானது, 63 வகையான வைரஸ் கிருமிகளால் பரவுகிறது. மழை மற்றும் பனிக்காலத்தில் தண்ணீர், காற்று மூலமாக விரைவில் பரவக்கூடியது. இந்நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாய், நாக்கு மற்றும் கால் குழம்புகளுக்கிடையே புண்கள் ஏற்பட்டு, தீவணம் உட்கொள்ளமுடியாமல் மிகவும் பாதிக்கப்படும். இந்நோய் கால்நடைகளை பாதிக்காத வகையில் ஆண்டுக்கு 2 முறை தடுப்பூசிப் போடப்பட்டு வருகிறது. அதனடிப்படை யில், 8ஆவது சுற்றின் கீழ் மார்ச் 21ஆம் தேதி வரை தடுப்பூசிப் போடும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே, கால்நடைகளை கடுமையாக பாதிக்கும் கோமாரி நோய்களிலிருந்து பாதுகாக்க கால்நடை வளர்ப்போர், இம்முகாமை பயன்படுத்தி தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். தடுப்பூசி குழுவினர் கிராமத்திற்கு வரும் போது 4 மாதத்திற்கு மேற்பட்ட கன்றுகள் முதல் சினைப் பசு, கறவை பசு உள்ளிட்ட அனைத்து மாடுகளுக்கும் கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட்டுப் பயன்பெற வேண்டும் என்றார் அவர். இந்நிகழ்ச்சியில்,குரும்பலூர் பேரூராட்சித் தலைவர் என். பாப்பம்மாள்,

மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் என். சேகர், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ப. மோகன், உதவி இயக்குநர் மனோகரன், பேரூர் செயலர் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### " அரசு மானியத்துடன் டிராக்டர்கள் வழங்க ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட விவசாயிகளுக்கு டிராக்டர்கள் வேளாண் பொறியியல் துறை சார்பில் வழங்க ரூ. 30 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் வே. துரைசாமி தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: 8 முதல் 20 வரை குதிரை திறனுள்ள டிராக்டர்களுக்கு ரூ. 1 லட்சம், 20 முதல் 70 வரை குதிரை திறனுள்ள டிராக்டர்களுக்கு ரூ. 1.25 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.

திருவாரூர் கோட்ட விவசாயிகள் பவித்திரமாணிக்கத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர், மன்னார்குடி கோட்ட விவசாயிகள் மன்னார்குடி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம். தேர்வாகும் விவசாயிகள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் டிராக்டர்களின் மாடல்களில் விரும்பியதை தேர்வு செய்து கொள்ளலாம். அரசு மானியத்துடன் டிராக்டர்களை பெற மானியம் போக மீதமுள்ள தொகைக்கான வரைவோலைகளை விவசாயிகள் தாங்கள் தேர்வு செய்யும் நிறுவனத்தின் பெயரில் எடுக்க வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு பவித்திர மாணிக்கத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறையை அணுகலாம்.

### தேனீ வளர்ப்பு: கல்லூரி மாணவிகளுக்கு பயிற்சி

திருநெல்வேலி ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு குலசேகரம் அருகேயுள்ள மலைவிளையில் தேனீ வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்தி குறித்த செயல் விளக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இம் முகாமிற்கு முன்னோடி தேன் உற்பத்தியாளரும், பயிற்சியாளருமான பி. ஹென்றி தலைமை வகித்து மாணவியருக்கு பயிற்சி அளித்தார். இதில்,

தேனீக்களின் வகைகள், அதன் குணங்கள், தேனீக்களை செயற்கையாக கூடுகளில் வைத்து பராமரித்தல், தேனீ குடும்பங்களை பிரித்தல், கூடுகளில் இருந்து தேன் எடுத்தல், தேனீக்களால் ஏற்படும் அயல் மகரந்த சேர்க்கை உள்ளிட்டவை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில், ராணி அண்ணா கல்லூரியின் 3 ஆம் ஆண்டு விலங்கியல் துறைத் தலைவர் விக்டோரியா தங்கம் தலைமையில் பேராசிரியர்கள் ஜெயராணி, முத்தமிழன், லில்லி மற்றும் 45 மாணவியர் பங்கேற்றனர்.

**<u>அனைத்துக் கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி: ஆட்சியர்</u>**

விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்துக் கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும் என்று மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்தார். விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியம், வெங்கடேசபுரம் ஊராட்சியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. முகாமை ஆட்சியர் வா.சம்பத் தொடங்கி வைத்து பேசியதாவது: விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் மார்ச் 1ஆம் தேதி முதல் மார்ச் 21ஆம் தேதி வரை 21 நாள்களுக்கு ஒவ்வொரு கிராமங்களிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் கட்டுப்படுத்தும் தடுப்பூசி போடும் பணி மாவட்டம் முழுவதும் நடைபெறுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 6,71,750 ஆகும். மாவட்டத்தில் 21 இடங்களில் குளிர்பதன நிலையில் ஐ.எல்.ஆர் அமைக்கப்பட்டு தடுப்பூசி மருந்தும், அனைத்து இடங்களுக்கு எடுத்து செல்லவும், மீண்டும் அதே குளிர்பதன நிலையில் வைப்பதற்கும் போதுமான வசதியும் செய்யப்பட்டுள்ளது. தடுப்பூசி போடுவதற்கு மாவட்டத்தில் மொத்தம் 107 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் 1 கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர், பராமரிப்பு உதவியாளர் என்ற அளவில் அமைக்கப்பட்டு 21 நாள்களில் தடுப்பூசி போடும் பணி முழுவதும் முடிக்கப்படும். இரண்டு அல்லது மூன்று ஊராட்சி

ஒன்றியங்களுக்கு உதவி இயக்குநர் நிலையில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை கண்காணிக்க கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கால்நடைகளுக்கு போடப்படும் தடுப்பூசி சகோதரத் துறையான வருவாய்த் துறை, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சிச் செயலர், ஆவின் பொது மேலாளர், வனத்துறை அலுவலர்கள், புதுவாழ்வு திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மைய பேராசிரியர் மற்றும் தொண்டு நிறுவனம் ஆகியோர் இணைந்து செயல்பட உள்ளனர் என்றார் ஆட்சியர். இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் எஸ்.குருவையா, காணை ஒன்றியக் குழுத் தலைவர் இளங்கோவன், மண்டல அலுவலக சிறப்பறிஞர் டி.எம்.சாந்தி, விழுப்புரம் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர்கள் பி.சுந்தர்ராஜன், கே.மகேந்திரன், அன்பழகன், சந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் லட்சுமி ராஜேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**<u>உயிர் உரங்களை இட்டால்தான் மண் வளம்பெறும்</u>**

உயிர் உரங்களை இட்டால்தான் மண் வளம்பெறும் என மண்புழு விஞ்ஞானி சுல்தான் அகமது இஸ்மாயில் கூறியுள்ளார். புதுவைப் பகுதியில் சர்வதேச ஒளி ஆண்டு, சர்வதேச மண் ஆண்டு, அறிவியல் நாட்டுயர்வுக்கே ஆகியவற்றை மையமாக வைத்து தேசிய அறிவியல் தின விழா நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக புதுவை அறிவியல் இயக்கம், புதுச்சேரி அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை ஆகியவை சார்பில் தேசிய அறிவியல் தின விழா வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெற்றது. இதில் அறிவியல் இயக்கத் தலைவர் கே.எம்.தமிழ்மணி, பொதுச்செயலர் அ.ஹேமாவதி, துணைத்தலைவர்கள் ஆர்.தட்சணா மூர்த்தி, முனைவர் த.பரசுராமன், ப.ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். மண்புழு விஞ்ஞானி சுல்தான் அகமது இஸ்மாயில், சத்தான உணவு உற்பத்திக்கு ஆரோக்கியமான மண்ணின் அவசியம்

என்ற தலைப்பிலும், தமிழ்நாடு அறிவியல் இயக்க துணைத் தலைவர் பொ.ராஜமாணிக்கம், அறிவியல் நாட்டுயர்வுக்கே என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கினர். முனைவர் சுல்தான் அகமது இஸ்மாயில் பேசியதாவது: மண்ணுக்கும் உயிர்ப்பு இருக்கிறது. எனவே உயிர் உரங்களை இட்டால்தான் அது வளமாகும். மாறாக உப்புகள் அடங்கிய வேதி உரங்களை பயன்படுத்துவதால் மண் உயிர் தன்மையை இழந்து விடுகிறது. விஞ்ஞானிகளால் எதை வேண்டுமானாலும் உருவாக்க முடியும். ஆனால் ஒரு பிடி மண்ணை உருவாக்க முடியாது. ஐ.நா. அறிவித்துள்ள சர்வதேச மண் ஆண்டை நாம் ஒரு வாய்ப்பாக கருதி பள்ளி முதல் விவசாயிகளின் நிலம் வரை இந்த சேதியை கொண்டு செல்ல வேண்டும். அதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்றார். பின்னர் தேசிய அறிவியல் தினப்போட்டியில் வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசு, சான்றிதழ்களை சுல்தான் அகமது இஸ்மாயில் வழங்கினார். இதையடுத்து சர்வதேச ஒளி ஆண்டு குறித்த நிகழ்ச்சி வில்லியனூரில் உள்ள ஆச்சாரியா கல்லூரி கலை அரங்கத்தில் முதல்வர் ஸ்ரீமதி தலைமையில் நடைபெற்றது. இந்திய கணிதவியல் துறை விஞ்ஞானி டி.இந்துமதி, ஒளியின் வரலாறும் அறிவியலும் என்ற தலைப்பிலும், புதுவை பல்கலைக்கழக பேராசிரியர்.எம்.வி.சத்தியராணா, ஒளியின் கதை என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கினர். அறிவியல் இயக்கச் செயலர் சு.முருகவேல் நன்றி கூறினார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>விவசாயிகள் அனைவருக்கும் நலம் தரும் மசோதா: உரத்துறை அமைச்சர்</u>**

புதுடில்லி: நாட்டில் உள்ள விவசாயிகள் அனைவருக்கும் நலம் தரும் மசோதாவாக தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த கால சட்டத்தில் எதுக்கெல்லாம் போராடினார்களோ அனைத்து அம்சங்களும் கொண்டு

வரப்பட்டுள்ள இந்த மசோதாவை நிறைவேற்றுவோம் என உரத்துறை அமைச்சர் ஹன்ஸ்ராஜ் கூறியுள்ளார்.

## 1,000 ஏக்கரில் தென்னை சாகுபடி திருப்பூர் விவசாயிகளுக்கு புது திட்டம்

திருப்பூர் : திருப்பூர், நொய்யல் கரையோர விவசாயிகளுக்கு, தென்னை சாகுபடி மானியம் வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதாக, கலெக்டர் தெரிவித்துள்ளார். 'திருப்பூர் மாவட்டத்தில் இயங்கும் சாய, சலவை ஆலைகளால் நொய்யல் ஆறு மாசுபட்டு, பல கிலோ மீட்டர் சுற்றளவுக்கு விளைநிலங்கள் பாழ்பட்டுள்ளன' என்று, விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர். 'ஜீரோ டிஸ்சார்ஜ்' தொழில்நுட்பம் பின்பற்றினாலும், அவ்வப்போது தண்ணீரின் உப்புத்தன்மை அதிகரிப்பதால், நொய்யல் கரையோர விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், தென்னை சாகுபடிக்கு மானியம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த, மாவட்ட நிர்வாகம் முனைப்பு காட்டி வருகிறது. ஆண்டிபாளையம் குளத்தில் பொழுதுபோக்கு பூங்கா உள்ளிட்ட மேம்பாட்டு பணி துவக்க விழா நேற்று நடந்தது. விழாவில் கலெக்டர் கோவிந்தராஜ் பேசுகையில், "நொய்யலாற்றின் தண்ணீர் பெறும் குளங்களால், திருப்பூர் நகரில் நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கப்படுகிறது. தற்போது, 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பாட்டு பணிகள் நடப்பதால், விவசாயிகள் பயனடைவர். நொய்யல் கரையோரம் உள்ள விவசாய நிலங்களில், தென்னை சாகுபடி செய்ய மானியம் வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளது. இந்த திட்டத்தில், மாவட்டத்தில், 1000 ஏக்கர் தென்னை சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயிகளுக்கு விரைவில் அறிவிக்கப்படும்," என்றார்.

## நெல்லில் அதிக லாபம் கிடைக்கவேளாண் அலுவலர் ஆலோசனை

திருவள்ளூர்:நெல்லில் சரியான ஈரப்பதம் அறிந்து சேமித்தால், அதிக லாபம் கிடைக்கும் என, வேளாண் அலுவலர் தெரிவித்து உள்ளார்.

திருவள்ளூர் விதை பரிசோதனை ஆய்வக, மூத்த வேளாண் அலுவலர் ஞானசேகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:நெல் விதைகளை அதிக ஈரப்பதத்துடன் சேமித்து வைத்தால், விதை தரம் கெட்டு முளைப்புத்திறன் பாதிக்கப்படும்; பயிர் வளர்ச்சி குறைந்து மகசூல் பாதிக்கப்படும்; இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். இதை தவிர்க்க, நெல் விதைகளை அறுவடை செய்தவுடன் நிழலில் உலர்த்தி, காய வைத்து சேமிக்க வேண்டும். நெல் விதைகளை, 13 சதவீதத்திற்கு குறைவான ஈரப்பதத்துடன் சேமித்தல் வேண்டும். இதனால், விதை நன்கு கிளைத்து அதிக மகசூல் கிடைக்கும்.இவ்வாறு, அதில் கூறப்பட்டு உள்ளது.

**மீன் வளர்ப்போர் முகமையில் உறுப்பினராக சேர அழைப்பு**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில், உறுப்பினராக சேர, கலெக்டர் ராஜேஷ் அழைப்பு விடுத்துள்ளார். இது குறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

---

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், புதியதாக கிருஷ்ணகிரி மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஆரம்பித்து, செயல்பட்டு வருகிறது. இம்முகமையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த மீன்வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள மீன் வளர்ப்போர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து, முகமை மூலம் அரசு நலத்திட்டங்கள் பெற்று, நன்கு செயல்பட்டு, தங்களது வருவாயினை பெருக்கி கொள்வதோடு மட்டுமல்லாமல், மாவட்டத்தின் மீன் உற்பத்தியினையும் பெருக்க வேண்டும் என்ற நோக்கில், அனைத்து மீன்வளர்ப்போரும், இம்முகமையில் உறுப்பினராக சேரவேண்டும். எனவே, தகுதியான, ஆர்வமுள்ள மீன் வளர்ப்போர்கள் முகமை உறுப்பினர்களாக பதிவு செய்ய, கிருஷ்ணகிரி மீன் துறை உதவி இயக்குனர் அலுவலகம், பாம்பாறு அணை, பாரூர், கிருஷ்ணகிரி அணை ஆகிய இடங்களில் உள்ள மீன் வள ஆய்வாளர்கள் அலுவலகங்கள், ஓசூர் மீன்வள சார்

ஆய்வாளர் அலுவலகம் ஆகியவற்றை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

---

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**சிதம்பரத்தில்திடீர்மழை**

சிதம்பரம், சிதம்பரத்தில் நேற்று திடீர் மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

வெயிலின்தாக்கம்

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையின்போது நவம்பர், டிசம்பர் மாதங்களில் சிதம்பரம் மற்றும் சுற்றுப்பகுதியில் பலத்த மழை பெய்தது. இதன்பின்னர் கடந்த 2 மாதமாக மழை பெய்யவில்லை. ஆனால் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது.கோடை காலம் நெருங்கும் நிலையில் நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. இதிலிருந்து தப்பிக்க இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் தொப்பி அணிந்தும், குடை பிடித்தபடியும், கைக்கு உறை அணிந்து, முகத்தை துணியால் மூடிக்கொண்டு செல்வதை காண முடிகிறது.

திடீர் மழை

இந்நிலையில் நேற்று காலை திடீரென்று வானில் மேகங்கள் திரண்டு திடீரென்று சாரல் மழை பெய்தது. காலை 10.30 மணியளவில் பலத்த மழையாக கொட்டியது. சுமார் 10 நிமிடங்கள் நீடித்த மழையால் சாலையோர பள்ளங்களில் தண்ணீர் தேங்கியது. இந்த திடீர் மழையை எதிர்பாராத மக்கள், நனைந்தபடியே சாலையில் சென்றனர். இந்த மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இதேபோல் காட்டுமன்னார் கோவில், குமராட்சி பகுதியிலும் லேசான சாரல் மழை பெய்தது. மதியம் 11 மணிக்கு மேல் வெயிலின் தாக்கம் வழக்கம்போல் இருந்தது.

# ஈரோட்டில் காற்றுடன் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு, ஈரோட்டில் திடீரென காற்றுடன் நேற்று பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பு

ஈரோட்டில் கடந்த பிப்ரவரி மாதத்தின் தொடக்கத்தில் இருந்தே கோடை வெயில் தாக்கம் ஆரம்பித்தது. இதனால் ஈரோட்டில் கோடைக்காலம் தொடங்கி விட்டது என்ற பொதுமக்கள் நினைக்கும் அளவுக்கு வெயில் அடித்தது. இதன்காரணமாக ஈரோட்டின் பல பகுதிகளில் ஆங்காங்கே ரோட்டோரங்களில் இளநீர், கம்மங்கூழ், நீர் மோர், கரும்புச்சாறு மற்றும் குளிர்பான கடைகள் அமைக்கப்பட்டு வியாபாரம் அமோகமாக நடைபெற்று வந்தது. அதுமட்டுமின்றி வெப்பத்தை தணிக்கும் கோடைக்கால பழங்களான தர்ப்பூசணி, முலாம்பழம் ஆகியவற்றின் விற்பனையும் சூடுபிடித்தது. ஒவவொரு நாளும் வெயிலின் தாக்கம் அதிகரித்துக்கொண்டே சென்றதால் மழை பெய்யாதா? என்று மக்கள் எதிர்பார்த்து ஏங்கும் அளவுக்கு வெயில் அடித்தது.

## பலத்தகாற்றுடன்மழை

இந்த நிலையில் ஈரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று மாலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதனைத்தொடர்ந்து பலத்த காற்று வீச ஆரம்பித்தது. இதனைத்தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு மழைத்தூறல் விழுந்தது. பின்னர் திடீரென பலத்த மழையாக மாறி கொட்டி தீர்த்தது. இதனால் ஈரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள திண்டல், மேட்டுக்கடை, சத்திரம்புதூர், மூலக்கரை, கூரபாளையம், வாய்க்கால்மேடு உள்பட பல பகுதிகளில் மழை நீர் ரோடுகளில் வெள்ளம்போல் கரைபுரண்டு ஓடியது. மழைக்காக 2 சக்கர வாகனங்களில் சென்றவர்கள் ரோட்டோரங்களில் இருந்த கட்டிடங்களில் ஒதுங்கினர். ஆனால் பலத்த காற்றுடன் மழை பெய்ததால் கட்டிட பகுதிகளில் ஒதுங்கி இருந்தவர்களும் நனைந்தனர்.

விவசாயிகள்மகிழ்ச்சி

நேற்று இரவு 8 மணிக்கு வீசிய பலத்த காற்றால் ஈரோட்டின் முக்கிய சந்திப்பாக உள்ள எம்.ஜி.ஆர். சிலை சந்திப்பில் அங்கு வைக்கப் பட்டிருந்த விளம்பர பலகை கீழே சாய்ந்தது. இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. உடனே போக்குவரத்து போலீசார் விரைந்து செயல்பட்டு விளம்பர பலகையை அங்கிருந்து அகற்றி போக்குவரத்தை சீர் செய்தனர். வெயில் தாக்கத்துக்கு இடையே நேற்று பெய்த மழை ஈரோட்டில் மண்ணை குளிர வைத்ததுடன், விவசாயிகளையும் மகிழ்ச்சி அடைய செய்தது. இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், 'இந்த மழையால் நகரின் பல பகுதிகளில் கருகி நிலையில் காசுஷ்ப்படும் மரங்களுக்கு உயிர்த்தண்ணீர் கிடைத்துள்ளது' என்றார்.

## வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் அமைச்சர் ஜெயபால் தொடங்கி வைத்தார்

தேமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற விலையில்லா வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாமை அமைச்சர் ஜெயபால் தொடங்கி வைத்தார்.

குடற்புழுநீக்கசிகிச்சைமுகாம்

நாகை மாவட்டம் கீழ்வேளூரை அடுத்த தேமங்கலம் ஊராட்சியில் தமிழக அரசால் வழங்கப்பட்ட விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடு களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கினார். கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் நாகராஜன் வரவேற்றார். முகாமை மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழகத்தில் 2-ம் வெண்மை புரட்சி ஏற்படுத்துதல் மற்றும் கிராமப் புறங்களில் உள்ள ஆதிதிராவிட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும்

பிற்படுத்தப்பட்ட ஏழை பொதுமக்கள் தங்களது வருமானத்தை பெருக்கி பயன்பெறும் வகையில் தமிழக அரசு, விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், கடந்த 2011-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் தொடங்கி வைக்கப்பட்டு, வெற்றிகரமாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தமிழக அரசின் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், 2014-2015-ம் ஆண்டு வரை நாகை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 600 விலையில்லா கறவைபசுக்கள்வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லாவெள்ளாடுகள்

அதேபோல் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 2014-2015-ம் ஆண்டு வரை 18 ஆயிரத்து 320 பயனாளிகளுக்கு 73 ஆயிரத்து 280 விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வெள்ளாடுகள் இதுவரை 1 லட்சத்து 17 ஆயிரத்து 248 குட்டிகள் ஈன்றுள்ளன. தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாமும் தற்போது நடைபெற்று வருகிறது. தேமங்கலம் ஊராட்சியில் 71 பயனாளிகளுக்கு, 284 விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த முகாமை விவசாயிகள் பயன்படுத்தி தங்களது வெள்ளாடுகளை முகாமிற்கு கொண்டு வந்து சிகிச்சை பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறினார். முகாமில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அண்ணாதுரை, தாசில்தார் நாராயணசாமி, ஒன்றியக்குழு உறுப்பினர் அலிஹுசைன், ஊராட்சி மன்ற தலைவர் சுமதி சிவக்குமார், வெளிப்பாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் குணசேகரன், ஊராட்சி மன்ற துணை தலைவர் பன்னீர்செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கால்நடைத்துறை உதவி இயக்குநர் ரமேஷ் நன்றி கூறினார்.

இன்றைய வேளாண் செய்திகள்

<u>6¾ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி கலெக்டர் சம்பத் தொடங்கி வைத்தார்</u>

விழுப்புரம், விழுப்புரம் மாவட்ட த்தில் உள்ள 6¾லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியினை கலெக்டர்சம்பத்தொடங்கிவைத்தார்.

<u>கோமாரிநோய்</u>

விழுப்புரத்தை அடுத்த காணை ஊராட்சி ஒன்றியம் வெங்கடேசபுரத்தில் கால் நடை பராமரிப்புதுறை மூலம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது. இதற்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து பேசியதாவது:- விழுப்புரம் மாவட்டத்தில், கால்நடை பராமரிப்பு துறை யின் மூலம் இன்று (அதாவது நேற்று ) முதல் 21-ந் தேதி வரை ஒவ்வொரு கிராமங் களிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது. முகாம் நடைபெறும் இரண்டு நாட்களுக்கு முன்னர் அந்தந்த கிராம பஞ்சாயத்து தலைவர்கள் வாயிலாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

<u>சிறப்பாகசெயல்படவேண்டும்</u>

விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 6 லட்சத்து 71 ஆயிரத்து 750 கால்நடைகள் உள்ளது. விவசாயிகள் வளர்க் கும் அனைத்து கால்நடை களுக்கும் 100 சதவீதம் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ள வேண்டும். கோமாரி நோயை தடுக்கும் விதமாக மாவட்டத் தில் 107 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது. நீங்கள் அனை வரும் சிறப்பாக செயல்பட்டு நடப்பாண்டில் கோமாரி நோயால் கால்நடைகள் இறக்கா வண்ணம் பார்த்து கொள்ள வேண்டும் என்றார். நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் குருவையா, விழுப்புரம் கால்நடை

நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர்கள் சுந்தரராஜன், மகேந்திரன், அன்பழகன், சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் தேவை அறிந்து கூடுதல் நிதி பெற நடவடிக்கை கலெக்டர் தரேஸ் அஹமது தகவல்**

பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் நுண்ணீர் பாசன கருவிகள் தேவை விவரம் கேட்டறிந்து, கூடுதல் நிதி பெற நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் தரேஸ் அஹமது கூறினார்.

ஆய்வுகூட்டம்

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறை மற்றும் சகோதரத்துறைகள் திட்டப்பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் தரேஸ் அஹமது தலைமை தாங்கினார். அப்போதுஅவர்பேசியதாவது:-

பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது நெல் 8,879 எக்டரிலும், கரும்பு 5,237 எக்டரிலும், பயிறுவகை பயிர்கள் 1,879 எக்டரிலும், பருத்தி 40,049 எக்டரிலும், தானியப்பயிர்கள் 38,765 எக்டரிலும், எண்ணெய்வித்து பயிர்கள் 2,155 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஒரு லட்சம் ஒரு எக்டர் திட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் 1,000 செயல்விளக்க பண்ணைகள் மக்காச்சோளத்தில் அமைக்கப்பட்டது. இதுவரை 118 செயல்விளக்க பண்ணைகள் அறுவடை செய்யப்பட்டதில் அதிகபட்சமாக ஒரு எக்டருக்கு 7,100 கிலோவும், சராசரியாக 6,180 கிலோவும் கிடைத்துள்ளது.

கூடுதல்நிதி

பருத்தியில் ஒரு எக்டரில் 1.25 லட்சம் திட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் 1,000 செயல்விளக்க பண்ணைகள் அமைக்கப்பட்டது. ஒரு முறை பஞ்சு எடுக்கப்பட்டதில் ஒரு எக்டருக்கு 3 முதல் 4 குவிண்டால் வரை சராசரியாக கிடைத்துள்ளது. பருத்திக்கு நல்ல விலை கிடைக்க ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் செவ்வாய் கிழமைதோறும் ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கு நுண்ணீர் பாசனத்திற்கு 824 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு

மாவட்ட இயக்கக்குழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றில் 299 விண்ணப்பங்களுக்கு (346 எக்டர்) பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. மேலும் அனைத்து வட்டாரங்களிலும் நுண்ணீர் பாசன கருவிகள் தேவை விவரம் கேட்டறிந்து, கூடுதல் நிதி பெறவும்நடவடிக்கைஎடுக்கப்படும்.

காய்கறிகள்விற்பனை

பெருநகர காய்கறி சாகுபடி திட்டத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து வட்டாரத்திலிருந்தும் 1000 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 6 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை முருங்கை, தக்காளி, மிளகாய், கத்தரிக்காய், முள்ளங்கி மற்றும் பந்தல் காய்கறிகள் போன்ற காய்கறிகள் 167 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் அக்குழுக்கள் மூலம் 40 சதவீத மானியத்தில் வாகனம் பெற்று சாகுபடி செய்யப்பட்ட காய்கறிகளை விற்பனை செய்து கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் அழகிரிசாமி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜேந்திரன், தோட்டக்கலை துணை இயக்குனர் இந்திரா, வேளாண்மை துணை இயக்குனர் அய்யாசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.